# மனிதநேய விழுமியங்களைப் பாடசாலை மாணவர்களிடையே பேணி வளர்த்தல்
## (கிளிநொச்சிப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

அனுஷ்யா சத்தியசீலன்[1*]

**ABSTRACT.** கற்றவர்கள் - கல்லாதவர்கள் என்ற வேறுபாடு இன்றி விழுமியச் சிதைவு மிகுந்து காணப்படுவதைப் பார்க்க முடிகிறது. விஞ்சிய சுயநலப் போக்கு, மனித சமூகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை நாம் காணலாம். ஆக்கிரமித்தல், ஒப்பிடல், போட்டி, அச்சத்தின் விளைவாகக் காணப்படும் பதட்டம், இயற்கையைப் பாழ்படுத்தும் மனப்பாங்கு, வேற்றுமை மனப்பாங்கு இவையனைத்தும் மாணவர்களிடம் மிகுந்து விளங்குகின்றன. மனித மனத்தின் அக வெளிப்பாட்டின் பிரதிபலிப்புத்தான் புற உலகம். புறத்தில் காணப்படும் வன்முறைகளுக்கு எல்லாம் அகத்தில் நிலவும் வன்முறை உணர்ச்சிகளே ஆதாரம். எனவே சீர்திருத்தம் அல்லது மாற்றம் அகத்திலிருந்து தொடங்கப்படுதல் வேண்டும். இதற்குக் கல்வியானது மிகப் பெரும் பங்களிப்பைத் தரமுடியும். இத்தகைய சூழலில் மனிதநேய விழுமியங்களை மாணவர்களிடம் கொண்டெடுத்துச் செல்வது மிகவும் அவசியமாகிறது. வெறும் ஏட்டுக் கல்வி மட்டும் மாணவர்களிடையே நற்பண்புகளை மேம்படுத்தாது. தேர்வை முன்வைத்து இயங்கும் கல்வி அமைப்புக்கள், இனி மனிதனை உருவாக்க வல்ல கல்வியை வழங்குவது அவசியம். 'மனிதம்' சார்ந்த இத்தகைய நற்கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கான சரியான கல்வியில் அணுகு முறைகளைப் பின்பற்றுதலும் அவசியமாகிறது. அதிலும் போருக்குப் பின்னரான சூழலில் மனிதநேய விழுமியங்கள் புரிந்து கொள்ளப்படுதலும் கற்றுக் கொள்ளப்படுதலும் எமது சமூகத்தின் முன்னோக்கிய வளர்ச்சிக்கும். வாழ்வுக்கும் வழிவகுக்கும் என்ற வகையில் இவ்வாய்வு இடம் பெறுகிறது. இவ்வாய்வானது வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு என்ற வகையில் தரவுகளையும் ஆய்வுகுரிய விழுமியங்களை உள்ளடக்கி வினாக்கொத்து ஒன்று தயாரிக்கப்படும். கல்வித் துறை வல்லுனர்களிடம் இவ்வினாக்கொத்து அளிக்கப்பட்டு அவர்களால் இதன் ஏற்புடைமை உறுதிசெய்யப்படும். பாடசாலைக் கல்வி என்பது நற்பண்புகள் ஒருங்கிணைந்த மனிதனை உருவாக்க உதவ வேண்டும். மாணவர்கள் அன்பும் மனிதநேயமும் மிக்கவர்களாக விளங்கவேண்டும். அப்போது மட்டுமே போரும் பூசலுமற்ற ஒரு சமுதாயம் உருவாக்கப்பட முடியும். அதற்கான வழிகாட்டல்கள் ஆசிரியரால் வழங்கப்படவேண்டியது மிக அவசியம். அந்த வகையில் விழுமியச் சீர்குலைவு காணப்படும் இன்றைய சூழலில் இத்தகைய ஆய்வு அவசியமானது என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

**Key words:** மனிதநேய விழுமியங்கள், பாடசாலைக் கல்வி, விழுமியச்சீர்குலைவு.

* To whom correspondence should be addressed : anushyasathiaseelan@gmail.com
1 கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை